டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.11.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 124 - Madurai | Online Edition

# 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!!

சென்னை, நவ.14

தமிழகத்தில் இன்று 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ராமநாதபுரம், புதுக் கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

16 மற்றும் 17.11.24ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

18.11.24ல் தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

19.11.24 மற்றும் 20.11.24 வரையில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை நடத்திய மண்டல ஆய்வுக் கூட்டம்

புது தில்லி, நவ.14

புதுதில்லியில் நவம்பர் 13ந் தேதி, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை செயலாளர் அல்கா உபாத்யாயா, மேற்கு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் பிராந்திய ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். குஜராத், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், கோவா, பீகார் உள்ளிட்ட மேற்கு மாநிலங்களின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள், இயக்குநர்கள் மற்றும் திட்ட அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் கூடுதல் செயலாளர் வர்ா ஜோஷி மற்றும் புள்ளியியல் ஆலோசகர் ஜகத் ஹசாரிகா உள்ளிட்ட துறையின் முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது, ராஷ்ட்ரிய கோகுல் மின் (ஆர்ஜிஎம்), தேசிய கால்நடை இயக்கத்தின் கீழ் தொழில்முனைவோர் மேம்பாடு (என்.எல்.எம்), தேசிய விலங்கு நோய் கட்டுப்பாட்டு திட்டம் (என்.ஏ.டி.சி.பி) மற்றும் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் (என்.பி.டி.டி) உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களின் முன்னேற்றம் குறித்து செயலாளர் ஆய்வு செய்தார்.

கோமாரி நோய் (எஃப்எம்டி), புருசெல்லோசிஸ், பிபிஆர் (பெஸ்டே டெஸ் பெட்டிட்ஸ் ரூமினண்ட்ஸ்) மற்றும் கிளாசிக்கல் பன்றிக் காய்ச்சல் (சிஎஸ்எஃப்) போன்ற முக்கிய நோய்களுக்கு எதிரான தடுப்பூசியில் கவனம் செலுத்தும் மத்திய அரசின் முன்னோடி திட்டமான எல்.எச்.டி.சி.பி (கால்நடை சுகாதாரம் மற்றும் நோய் கட்டுப்பாட்டு திட்டம்) திட்டம் பரிசீலிக்கப்பட்டது.

கால்நடைகள், எருமைகள், செம்மறி ஆடுகள் மற்றும் ஆடுகளுக்கான ஆறு மாத தடுப்பூசிகளின் நிலை குறித்தும் விவாதிக்கப்பட்டது. கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு உதவுதல், நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளை செயல்படுத்துதல், 'பசு கல்யாண் சமிதிகள்' உருவாக்கம் ஆகியவை மற்ற தலைப்புகளில் அடங்கும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

செயலாளர் அல்கா உபாத்யாயா, தடுப்பூசி போடும் பணியை விரைவுபடுத்துமாறும், நோய் பரவுவதைத் தடுக்க அறிக்கை களை அதிகரிக்குமாறும் மாநிலங்களை வலியுறுத்தினார். பால் வளத் துறை வளர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், பதப்படுத்தும் திறனை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும், பால் பொருட்களை பல்வகைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தீவன உற்பத்தி பிரச்சினை குறித்து விவாதித்த அவர், அனைத்து மாநிலங்களும் தீவன சாகுபடியை விரிவுபடுத்து வதற்கான முயற்சிகளை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்,




சீரழிந்த வனப்பகுதிகள் உட்பட கிடைக்கக்கூடிய நிலத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கால்நடை காப்பீட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் அனைத்து கால்நடைகளுக்கும் இந்த பாதுகாப்பை விரிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். உழவர் கடன் அட்டை திட்டத்தின் மெதுவான முன்னேற்றம் குறித்தும் செயலாளர் கவலைகளை எழுப்பினார். இலக்குகளை அடைய உடனடி நடவடிக்கை எடுக்க அவர் அழைப்பு விடுத்தார். கூடுதலாக, பால்வளத் துறையை வலுப் படுத்த மாநிலங்கள் முழுவதும் கூட்டுறவு கட்டமைப்பை விரிவு படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். கால்நடை பராமரிப்புத் துறைக்கான எதிர்கால கொள்கைகளை வடிவமைப்பதில், 21வது கால்நடை கணக்கெடுப்பை வெற்றிகரமாக செயல்படுத்துவதின் முக்கிய பங்கு குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 13.5 லட்சம் சர்வே உட்பிரிவுகளில் டிஜிட்டல் பயிர் சாகுபடி பதிவு

# முதன்மை செயலர் தகவல்



கிருஷ்ணகிரி, நவ.14

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 13.5 இலட்சம் சர்வே உட்பிரிவுகளில், டிஜிட்டல் பயிர் சாகுபடி பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என வேளாண் வணிகத்துறை முதன்மைச் செயலர் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்டத்தில் நடைபெறும் டிஜிட்டல் பயிர் கணக்கீடு பணி குறித்து,



வேளாண்மை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைகுறள் தலைமை வகித்தார்.

இதில் வேளாண் வணிகத்துறை முதன்மைச் செயலர் பிரகாஷ் பேசியதாவது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 6-ம் தேதி முதல் டிஜிட்டல் பயிர் சாகுபடி மதிப்பீடு பணியில், வேளாண் மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகம், விதை சான்றளிப்புத்துறைகளை சார்ந்த அலுவலர்கள், தோட்டக்கலை கல்லூரி, பையூர், அதியமான் வேளாண்மை கல்லூரி, அத்திமுகம், மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகம், மாணவ, மாணவிகள் இணைந்து குழுக்களாக ஈடுபட்டுள்ளனர். இதுவரை 7 இலட்சம்






நிலத்தின் உட்பிரிவுகளில், டிஜிட்டல் பயிர் சாகுபடி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் ஒரு நபருக்கு, ஒரு நாளில் 100 டிஜிட்டல் பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவ, மாணவி களின் உணவு, தங்குமிடம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட காலத்திற்குள், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சாதனை அடைய வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் சி.பச்சையப்பன், தோட்டக்கலை இணை இயக்குநர் இந்திரா, செயர்பொறியாளர், கோவை வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 14.11.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 28 | 32 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 45 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 60 |
| 2 | வெண்டை | 40 | 48 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 75 | 80 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 30 | 34 | 62 | நூல்கோல் | 50 | 54 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 50 | 54 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 35 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 38 | 66 | காளிபிளவர் | 50 | 55 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 28 | 32 | 69 | இஞ்சி | 52 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 28 | 70 | புருக்கோலின் | 160 | 170 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 54 | 58 | 72 | குடமிளகாய் | 70 | 78 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 56 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 40 | 44 | 71A | | | |
| 20 | தேங்காய் | 50 | 54 | | | | |
| 21 | மாங்காய் | 50 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 48 | 52 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 75 | 85 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 42 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 11 | 13 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 40 | 45 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 28 | 32 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 50 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |

# டிஜிட்டல் கிராப் சர்வே பணியை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர்



திருச்சி, நவ.14

தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் பயிர் சாகுபடி குறித்த மின்னணு அளவீடு (டிஜிட்டல் கிராப் சர்வே) பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் கல்லூரி மாணவர்கள் இப்பணியை மேற்கொண்டு வருகிறார்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பயிர் சாகுபடி குறித்த மின்னணு அளவீடு பணி நடைபெற்று வருகிறது.




மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் இப்பணியை 13.11.24 அன்று மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் தீராம்பாளையம் கிராமத்தில் ஆய்வு செய்தார். மேலும், தீராம்பாளையம் கிராமத்தில் மாணவிகளுடன் கலந்துரையாடினார். பதிவேற்றம் செய்வதை குறித்து துறை அலுவலர்களை ஆய்வு செய்தார். ஆய்வின் பொழுது மாணவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் அளிக்கப்படுவதை உறுதி செய்தார். இந்த கணக்கீட்டு பணியை மேலும் சிறப்பாக மேற்கொள்ள அறிவுரை வழங்கினார். ஆய்வின் பொழுது வேளாண்மை இணை இயக்குநர் (பொ) கண்ணன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) சாந்தி, மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் நாலாந்தா வேளாண்மை கல்லூரி மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உர விற்பனை நிலையங்களுக்கு வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

விருதுநகர், நவ.14

விருதுநகர் மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரைநெல் 18000 ஹெக்டேர் பரப்பளவில் பயிடப்பட்டுள்ளது. அதுபோல் சிறுதானியங்கள் 36900 ஹெக்டேர் பரப்பளவிலும் யறுவகை பயிர்கள் 3500 ஹெக்டேர் பரப்பளவிலும் எண்ணெய் வித்துபயிர்கள் 1600 ஹெக்டேர் பரப்பளவிலும், பருத்தி11000 ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 203 தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் 179 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. தற்போது யூரியா 3391 டன், டி.ஏ.பி 903 டன், பொட்டாஷ் 553 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1662 டன் விவசாயிகளின் தேவைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது.




தற்போது வேளாண் விளைப்பொருட்கள் சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பு உள்ளது. மாவட்டத்திலுள்ள உர விற்பனை நிலையங்களில் விலைப் பட்டியல் இன்றியோ, அதிகபட்ச விலையைவிட அதிக விலைக்கு விற்றாலோ, PSO இயந்திரத்திற்கும் உண்மை இருப்பிற்கும் வேறுபாடு காணப்பட்டாலோ, உரங்களை பதுக்கி வைத்திருந் தாலோ, “O” படிவமின்றி விற்பனை செய்தாலோ, யூரியா உரத் தினை விவசாயம் இல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தினாலோ, போலியான உரங்களை விற்பனை செய்தாலோ, உரக் கட்டுப்பாட்டு சட்டம் 1985ன் படி உர விற்பனை நிலையங்களின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

மேலும், விவசாயிகள் உரம் விற்பனை தொடர்பான புகார்களை அந்தந்த பகுதிகளுக்கான வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் விவசாயிகள் தெரிவிக்கலாம் என விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




# நாட்டுக் கோழி வளர்ப்பில் சந்தேகங்களும் விளக்கங்களும் என்ற தலைப்பில் பயிற்சி

சேலம், நவ.14

வேளாண் பெருமக்களின் நலனுக்காக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது (VUTRC-SALEM) சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் அருகில் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகின்றது.

இம்மையத்தில் சான்றிதழ் உடன் கூடிய ஒரு நாள் பயிற்சியாக ‘நாட்டுக் கோழி வளர்ப்பில் சந்தேகங்களும் விளக்கங்களும்‘ என்ற தலைப்பில் 26.11.24 அன்று நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற விரும்பும் விவசாயிகள் எங்கள் மையத்தில் நேரடியாக வந்து ரூபாய் 500 செலுத்தி பதிவு செய்து ரசீது பெற்றுக்கொள்ளவும்.




பதிவு செய்வதற்கான கடைசி தேதி 22.11.24 ஆகும். இப்பயிற்சி முதலில் பதிவு செய்யும் 75 நபர்களுக்கு மட்டுமே நடத்தப்படும்.

ஆகையினால் கடைசி தேதி வரை தாமதிக்காமல் அரசு வேலை நாட்களில் சேலம் மையத்திற்கு நேரில் வந்து உடனடியாக பதிவு கொள்ளவும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மலை பகுதியில் விளையக்கூடிய ‘வாட்டர் ஆப்பிள்‘ சமவெளியில் விளையுது எப்படி ?



**ஆப்பிள் தான் நமக்கு தெரியும்? அது என்ன வாட்டர் ஆப்பிள்? தெரியுமா?**

பெரும்பாலும் மலைப்பகுதியில் பயிரிடப் பட்ட மருத்துவ குணமுள்ள இந்த வாட்டர் ஆப்பிள் (WATER APPLE) யோட தாயகம் இந்தியா தான் என்றாலும் எல்லா பகுதியில் விளைகிறது என்றால் ஆச்சரிய மாக இருக்கிறது அல்லவா?

**வாட்டர் ஆப்பிள்**

இது மணிவடிவில் ரோஸ் கலருடன் பார்ப்பதற்கு கண்கவரும் வகையில் நிறைய ஊட்டச்சத்துகள் நிறைந்த பழமாகும். இதற்கு ‘சைஜிஜியம் அக்யூம்‘ என்ற அறிவியல் பெயர் உண்டு. இதனை ரோஸ் ஆப்பிள் என்று அழைக்கப்படுகின்றன.




**இதற்கு வேறு பெயர்கள் உண்டா?**

இதற்கு இந்தியில் ‘சம்பக்கா அல்லது பனிசெம் என்றும் தமிழில் ‘ ஜம்பு /பன்னீர் நாவல் என்றும் தெலுங்கில் குலோபி ஜாமி செட் என அழைக்கப்படுகிறது.

**வாட்டர் ஆப்பிள் உள்ள சத்துகள்?**

100 கிராம் பழத்தில் கலோரிகள் 39 புரதம் 0.7 கிராம், கார்போஹைடிரேட் 8.5கிராம், கொழுப்பு 0.2 கிராம், நார்சத்து 1.2 கிராம். அத்துடன் பொட்டாசியம் கால்சியம் வைட்டமின் சி சத்துகளும் உள்ளன. இதனை நீங்கள் பச்சையாக சாப்பிட லாம் அல்லது புருட் சாலட் யுடன் கலந்தும் உண்ணலாம்.

### சாகுபடி முறை

ஏக்கருக்கு 160 கன்றுகள் நட்டு இயற்கை முறையில் சாகுபடி செய்தால் மூன்று ஆண்டுகளில் பலன் தரக்கூடியது. பழங்கள் அடர் சிவப்புநிறத்தில் நல்ல சுவையாக இருக்கும். இதற்கு (JAVA APPLE) என்ற பெயரும் உண்டு. வருடத்திற்கு 3 முறை அறுவடை செய்யலாம். இதனுடைய அறுவடை சீசன் ஏப்ரல்-ஜூலை கிட்டதட்ட 1500-2000 கிலோ வரை மகசூல் கிடைக்கும். கிட்டதட்ட 80/கிலோ என விற்பனை செய்யலாம்.

### மருத்துவ குணங்கள்

நீர்சத்து உள்ளது, நீரழிவு நோயை கட்டுப்படுத்தி சமநிலைக்கு கொண்டு வரும். உடல் எடையை குறைக்க/அதிகரிக்க உதவும். அனைத்து வயதினரும் உட் கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு அருகேயுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

Stanes

காலநிலை மாற்றத்தைத் தாங்கி
பயிரின் இலைகள் பசுமையாகவும்
செழிப்பாகவும் வளர... பயன்படுத்துவீர் !..

**கிரீன் மிராக்கிள் (GREEN MIRACLE)**

கிரீன் மிராக்கிள் **பயிரை வெப்பத்திலிருந்து காத்து**, கூடுதல் வளர்ச்சி மற்றும் மகசூலைத் தரக்கூடியது

இது **இலையின் மேல் படலமாக உருவாகி, சூரியஒளி வெப்பத்தை இலையில் அதிகமாவதை தடுக்கிறது**

அதனால் இலைவழி நீர் **ஆவியாகி விரயமாவதைக்** கட்டுப்படுத்துகிறது




**பயன்படுத்தும் முறை**

3 மில்லி கிரீன் மிராக்கிளை
1 லிட்டர் தண்ணீரில் கலந்து
தெளிக்க வேண்டும்

84899 04949, 84899 10105

>>> மேலும் விபரங்களுக்கு: www.tstanes.com

# தென்னையில் குரும்பை கொட்டுவதை தவிர்க்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தென்னை டானிக்

திருச்சி, நவ.14

தென்னையில் மகசூல் குறைந்து காணப்படுவதற்கு முக்கிய காரணங்கள் வறட்சி, ஊட்டச்சத்து குறைபாடுகள், பூச்சி, நோய் தாக்குதல் ஆகும். தென்னை விவசாயிகள் பூச்சி மற்றும் நோய் ஆகியவற்றிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கு கொடுப்பதில்லை. எந்த ஒரு பயிருக்கும் 17 வகையான ஊட்டச்சத்துக்கள் மிகவும் முக்கியமாக கருதப் படுகிறது.

தென்னையில் சரியான விகிதத்தில் பேரூட்டச்சத்துக்கள் நுண்ணூட்ட சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளை சரியான நேரத்தில் வேர்வழி செலுத்துவதன் மூலம் தென்னையில் குரும்பை கொட்டுவதை குறைத்து அதிக மகசூல் பெற முடியும்.

இவ்வாறாக ஊட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மகசூலை அதிகரிக்க, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மானது, டி.என்.ஏ.யு தென்னை டானிக் என்கிற பூஸ்டரை அறிமுகப்படுத்தி கடந்த 20 வருடங்களாக விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. தென்னை டானிக் என்பது தென்னைக்கு தேவையான பேரூட்டச் சத்துக்கள், நுண்ணூட்ட சத்துக்கள்மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர் ஆகும்.

**வேர் மூலம் தென்னை டானிக் அளிக்கும் முறை**

- பென்சில் பருமனுள்ள (இளம்வேர்) இளஞ்சிவப்பு நிறமுள்ள வேரை மரத்தின் அடிப்பகுதியில் இருந்து 3 அடி தள்ளி தேர்வு செய்ய வேண்டும்.
- தேர்ந்தெடுத்த தரமான இளம்வேரின் நுனிப்பகுதியைச் சாய்வாக சீவ வேண்டும்.
- தென்னை டானிக் அடைக்கப்பட்ட பாலித்தீன் பையை ஒரு மூலையில்வெட்டிக் கொள்ள வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சீவிய வேரை பாலித்தீன் பையில் அடிப்பகுதி வரை நுழைத்து இறுகக்கட்ட வேண்டும்.

● 24 மணி நேரத்திற்குள் டானிக் உறிஞ்சப்பட வேண்டும். இல்லையெனில் மற்றொருவே வருக்கு மாற்றிக்கட்ட வேண்டும்.

● தென்னை டானிக்கை ஒரு வருடத்திற்கு 2 முறையாக 6 மாத இடைவெளியில் செலுத்த வேண்டும்.

● ஒரு அடர் லிட்டர் தென்னை டானிக்கை வாங்கி 4 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு மரத்திற்கு 200 மில்லி வீதம் 25 மரத்திற்கு செலுத்தவும்.

தென்னை டானிக் செலுத்துவதன் மூலம் பச்சையம் அதிகரித்து ஒளிச்சேர்க்கை திறன் கூடும். இதனால் குரும்பை கொட்டுதல் குறைந்து பாளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

மேலும் காய்கள் பெரிதாகி பருப்பு எடை கூடும். பூச்சி நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதனால் விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் டி.என்.ஏ.யு தென்னை டானிக், தமிழ்நாடு




வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

எனவே விவசாயிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக தென்னை டானிக்கை மட்டுமே மேற்கண்ட இடங்களில் வாங்கி பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அல்லது அடர் திரவத்தை பார்சல் சர்வீஸ் மூலமாக கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி, திருச்சி மாவட்டம். தொலைபேசி எண் - 0431 - 2962854, 91717 17832. (அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்).

மேற்கண்ட தகவல்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காலநிலை மாற்றத்திற்கேற்ப பயிர் சாகுபடியில் மண்வள மேலாண்மையுடன் உகந்த மகசூலை பெறுவதற்கு பசுந்தாளுரப் பயிர்

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் 16.5 டன்/எக்டர் வளமான மண், மண் அரிமானத்தால் இழக்கப்படுகிறது. மேலும், தற்போது விவசாயிகளால் பயன்படுத்தப்படும் ஊட்டச்சத்துக்களின் உரப் பயன்பாட்டுத்திறன் தழைச்சத்து (30-40%) மணிச்சத்து (15-20%), சாம்பல் சத்து (50-80%), கந்தகச்சத்து (10-15%) ழிஐ நுண்ணூட்டச்சத்துக்கள் (1-5%) என்ற அளவு தான் உள்ளது.

இதற்கு முக்கியக் காரணம் சமச்சீரற்ற சத்து நிர்வாகம் மற்றும் தீவிர பயிர்சாகுபடி முறையால் மண்ணின் வளம் குன்றுவது ஆகியன.




மேற்கண்ட பாதக விளைவுகளை குறைந்த செலவில் சரிசெய்வதற்கு பசுந்தாள் உரப் பயிர்களை வளர்த்து மடக்கி உழுவதால் குறைக்க முடியும். இந்த முறையால் மேம்பட்ட மண் நலம், குறைந்த மண் அரிமானம், களைக்கட்டுப்பாடு மற்றும் அடுத்து பயிரிடப்படும் பயிர் மகசூல் அதிகரிப்பு இருக்கும்.

பல்வேறு பயிர்களில் பசுந்தாளுரப் பயிரினால் ஏற்பட்ட மகசூல் அதிகரிப்பு விவரம் பின்வருமாறு.

| பயிர் | பசுந்தாளுரப்பயிர் | மகசூல் அதிகரிப்பு (%) |
|---|---|---|
| மக்காச்சோளம் | சணப்பு | 26.4 |
| நெல் | தக்கைப்பூண்டு, | 7.8 |
| | உளுந்து (பயிர் சுழற்சியில்) | 14.8 |
| கரும்பு | தக்கைப்பூண்டு | 12-22 |
| | தட்டைப்பயறு | 10 |

எனவே, ஊட்டச்சத்து நிர்வாகத்தில் மற்ற ஊட்டச்சத்துக்களுடன் பசுந்தாளுரப்பயிர்களையும் சேர்த்தால் நீண்ட கால பயனாக மண் நலம் பேணுவதுடன் நீடித்த வேளாண்மை & உணவுப் பாதுகாப்பிற்கு வழிவகுக்கும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயி களை கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# வாழையில் பனாமா வாடல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி?

வாழையில் பனாமா வாடல் நோயை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்கள் முனைவர் இ.ஜான்சன் மற்றும் முனைவர் மா.கார்த்திகேயன் விளக்கமளித்துள்ளார்கள்.

இந்நோய் தாக்கப்பட்ட வாழையில் ஆரம்பத்தில் அடியிலுள்ள இலைகளின் இலைக்காம்புகள் வெளிறிய மஞ்சள் நிறத்தில்ல் காணப்படும். பின்பு மஞ்சள் நிறம் இலை மற்றும் இலைக் காம்புகள் முழுவதும் பரவி கடைசியில் ஒடிந்து விடுகின்றன. நோயுற்ற வாழையின் ஏனைய இலைக் காம்புகள் மற்றும் அடுத்து அடுத்து வெளிவரும் இலைகள் அனைத்தும் மஞ்சள் நிறமாகவும், ஒடிந்தும், மேலும் மேல் குருத்து மட்டும் நேராக நீட்டிக்கொண்டு இருக்கும். வாழைக் கன்றுகளில் குருத்து விரியாமல் மஞ்சள் நிறமாகி வாடி விடுகின்றது.




இந்நோய் தாக்கப்பட்ட வாழைத்தண்டின் நீள வாக்கில் அடியிலிருந்து வெடிப்புகள் காணப்படும். வாழை கிழங்கை குறுக்காக வெட்டிப் பார்த்தால் சாற்றுக்குழாய் திசுக்கள் கருமை நிறமாக மாறி இருப்பதைக் காணலாம். இவ்வாறு சாற்றுக் குழாய்களில் இப்பூசணம் வளர்ச்சி அடைந்து அடைத்துக் கொள்வதால் தண்ணீரும் ஊட்டச் சத்துக்களும் வேரில் இருந்து மற்ற பாகங்களுக்குச் செல்ல இயலாமல் தடுக்கப்பட்டு வாழை காய்ந்துவிட ஆரம்பிக்கிறது. இதனால் இந்நோயை வாடல்நோய் என அழைக்கிறோம். பொதுவாக இந்நோய் தாக்கப்பட்ட வாழை மரத்தில் தார்கள் ஈனுவதில்லை. அப்படியே தார்கள் வந்தாலும் காய்கள் சிறித்தும் குறைந்த எண்ணிக்கையிலும் காணப்படும். இக்காய்களும் சீராக பழுப்பதில்லை. இந்நோய் மண்மூலம் பரவுகிறது.

எனவே பனாமா வாடல் நோயை கட்டுப்படுத்த நோயில்லாத வாழைக் கன்றுகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுத்த வாழைக் கன்றுகளை 0.1 சத கார்பன்டசிம் 1 கரைசலில் (1 கிராம் கார்பன்டசிம் 1 லிட்டர் தண்ணீரில்) 30 நிமிடம் ஊறவைத்து பின்பு நிழலில் உலர வைத்து நடவு செய்ய வேண்டும். நட்டபின், ஒன்றிரண்டு வாழைகளில் அறிகுறிகள் தென்பட்டவுடன் ஒரு வாழை மரத்திற்கு கார்பன்டசிம் 0.2 சதம் அதாவது 2 கிராமை 1லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து ஒரு வார இடைவெளியில் 2 அல்லது 3 முறை நோயுற்ற வாழை மரத்தைச் சுற்றிலும் ஊற்ற வேண்டும் அல்லது 2 சதம் கார்பன்டசிம் கரைசலை (2 கிராமை 100 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து) ஒரு மரத்தில் 3 மில்லி என்ற அளவில் 45 டிகிரி கோணத்தில் கிழங்கில் 10 செ.மீ ஆழத்தில் ஊசி மூலமாக 3, 5 மற்றும் 7 வது மாதங்களில் உட்செலுத்த வேண்டும்.

மேலும் இந்நோயைக் கட்டுப்படுத்த வாழையை தொடர்ந்து சாகுபடி செய்யாமல், வாழை பயிரிட்ட வயல்களில் நெல் பயிரட்டு பின்பு வாழை சாகுபடி செய்யலாம். இந்நோய் மண் மற்றும் நோயுற்ற வாழையின் சருகுகளால் பரவுவதால் வாழைத் தோட்டத்தை சுத்தமாக வைத்து இருப்பது நல்லது. நோய் முற்றிய மரத்தை கிழங்கோடு தோண்டி எடுத்து எரித்தல், நோய் மேலும் பரவுவதைத் தடுக்க உகந்த வழியாகும். நோய் காணும் குழியில் சுண்ணாம்பை குழிக்கு 1.2 கிலோ வீதம் போட்டு ஆற விடவும்.

  

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# விதையின் தரம் அறிந்திட விதை பரிசோதனை அலுவலர் அழைப்பு

திருச்சி, நவ.14

திருச்சி விதைபரிசோதனை அலுவலர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கார்த்திகை பட்டத்தில் தேவையான விதையின் தரத்தை அறிந்து சாகுபடி செய்திட அறிவுரை கூறினார்.

கார்த்திகை பட்டத்தில் உளுந்து,பாசிப்பயறு, நிலக்கடலை, கம்பு, சூரியகாந்தி, எள் மற்றும் நெல்(பின் சம்பா) போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும் போது விதையின் தரத்தினை தெரிந்து கொண்டு தரமான விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெறலாம். தமிழக அரசு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் திருச்சி, விதை பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரகக் கலப்பு ஆகிய நான்கு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. விதை உற்பத்தியாளர்கள் விதை விற்பனையாளர்கள் மட்டுமின்றி விவசாயிகளும் தங்களிடம் உள்ள விதையின் தரத்தை பரிசோதனை செய்து அறிந்து கொள்ளலாம்.

விதை சட்டம் 1966 பிரிவு 7 (பி)ன் படி குறைந்தபட்ச முளைப்புத்திறன் தரம் நிர்ணயம் செய்து அறிவிக்கபட்டுள்ளது.

| வ.எண் | பயிர் | குறைந்தபட்ச முளைப்புத்திறன் |
|---|---|---|
| 1 | நெல் | 80 % |
| 2 | உளுந்து, பாசிப்பயறு | 75 % |
| 3 | நிலக்கடலைக்கு | 70 % |
| 4 | எள் | 80 % |
| 5 | கம்பு | 75 % |

விதையின் முளைப்புத் திறனை தெரிந்து கொண்டு விதையளவை முடிவு செய்யலாம். விதையின் ஈரப்பதத்தை தெரிந்து கொண்டு சரியான ஈரப்பதத்தில் விதையினை சேமித்து வைக்கும் போது பூச்சி நோய் தாக்குதல் ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

| வ.எண் | பயிர் | அதிகபட்ச ஈரப்பத அளவு (%) |
|---|---|---|
| 1 | நெல் | 13 |
| 2 | பயறு வகைகள் | 9 |
| 3 | எண்ணெய் வித்துக்கள் | 9 |
| 4 | சிறுதானியங்கள் | 12 |



பிறரக கலப்பு பரிசோதனையின் மூலம் வேறு ரக விதைகள் கலந்துள்ளதா என தெரிந்து கொண்டு விதையின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கான விதைகுவியலில் இருந்து மாதிரி வதைகளை குறைந்தபட்சமாக நெல் – 50 கிராம், உளுந்து, பாசிப்பயிறு – 100 கிராம். நிலக்கடலை – 500 கிராம், எள், கம்பு – 25 கிராம், ஆகிய அளவில் எடுத்து தங்களது முழு முகவரியுடன் கூடிய கடித்ததுடன் திருச்சி புத்தூர் நான்கு ரோட்டில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு வளாகத்தின் கீழ் தளத்தில் அமைந்துள்ள விதைபரிசோதனை நிலையத்தில் நேரில் கொடுக்க வேண்டும்.

ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80 கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து தெரிந்து கொள்ளலாம்.




இந்நிலையத்தில் இதுவரை 3169 விதை மாதிரிகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு 156 விதை மாதிரிகள் தரமற்றது என கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் விதைப்பதற்கு முன் விதைபரிசோதனை செய்து தரமான விதைகளை தேர்வு செய்து அதிக மகசூல் அடைந்து பயன் பெறுமாறு திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் ரெ.ரமாபிரபாநளினிஆகியோர் தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.